**தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–06.**

**முன்னிலை:முனைவர்.ச.கண்ணப்பன்.**

**ந.க.எண்.077404/அ1/இ1/2024, நாள்.02.12.2025.**

*****

பொருள்: தமிழ்நாடு பள்ளிக்கல்விப்பணி – தமிழ்நாடு பள்ளிக்கல்விப்பணி விதிகளில் வகுப்பு–IV இன் கீழ்வரும் மாவட்டக்கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்தப் பணியிடங்கள் – அரசு உயர் / மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் அதனையொத்த பணிநிலையில் பணிபுரியும் அலுவலர்களுக்கு – மாவட்டக்கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்தப் பணியிடத்திற்கு பதவி உயர்வு / பணிமாறுதல் அளித்து ஆணையிடுதல் – சார்பு.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.1433,பள்ளிக்கல்வித்துறை, நாள்.07.09.1988.
2. அரசாணை (நிலை) எண்.50, பள்ளிக்கல்வித் (ப.க.1(1)) துறை, நாள்.27.02.2025.
3. அரசாணை (நிலை) எண்.154, பள்ளிக்கல்வித் (ப.க.1(1)) துறை, நாள்.30.06.2025.
4. சென்னை–06, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.077404/அ1/இ1/2024, நாள்.11.07.2025, 05.08.2025, 04.09.2025 மற்றும் 17.09.2025.

-----

தமிழ்நாடு பள்ளிக்கல்விப்பணி விதிகளில், வகுப்பு IV–இன் கீழ்வரும் மாவட்டக்கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்தப் பணியிடங்களுக்கு 2025–2026 ஆம் ஆண்டிற்கான பதவி உயர்வு / பணிமாறுதல் மூலம் நிரப்பப்படவேண்டிய மொத்தக் காலிப்பணியிட மதிப்பீடு '60' என அரசளவில் நிர்ணயம் செய்து பார்வை 2–இல் காணும் அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டதன் தொடர்ச்சியாக, மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்த பணியிடங்களுக்கான தேர்ந்தோர் பெயர்ப்பட்டியலை ஏற்பளித்து பார்வை 3–இல் காணும் அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக அத்தேர்ந்தோர் பெயர்ப்பட்டியலில் வரிசை எண். 01 முதல் 36 வரையுள்ள (வரிசை எண்.04 மற்றும் 26 இல் கண்டுள்ள ஓய்வு பெற்றவர்களை தவிர்த்து) 34 அரசு உயர்/மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு பார்வை 4 இல் காணும் 11.07.2025 நாளிட்ட செயல்முறைகளின்படி பதவி உயர்வு/பணிமாறுதல் வழங்கி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டது.

இதன்தொடர்ச்சியாக 05.08.2025 நாளிட்ட செயல்முறைகளில், தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல் வரிசை எண்.37 முதல் 40 வரை (விகிதாச்சார சுழற்சி எண்.1029 முதல் 1032 வரை) கண்டுள்ள தலைமையாசிரியர்களுக்கு பதவி உயர்வு / பணிமாறுதல் வழங்கியும், 04.09.2025 நாளிட்ட செயல்முறைகளில், தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல் வரிசை எண்.41 (விகிதாச்சார சுழற்சி எண்.1033)–இல் கண்டுள்ள அரசு உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியருக்கு பதவி உயர்வு வழங்கியும், வரிசை எண்.42 –இல் (விகிதாச்சார சுழற்சி எண்.1034) கண்டுள்ள அரசு மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியருக்கு, பணிமாறுதல் வழங்கி 17.09.2025 நாளிட்ட செயல்முறைளின்படியும் ஆணைகள் வழங்கப்பட்டது.

த.பி.பா..

இந்நிலையில், தற்போது அரசால் ஏற்பளிக்கப்பட்ட தேர்ந்தோர் பெயர்ப்பட்டியலில் வரிசை எண். 43 முதல் 60 வரையுள்ள (வரிசை எண்.46 மற்றும் 48-இல் கண்டுள்ள ஏற்கனவே ஓய்வு பெற்றவர்களை தவிர்த்து) கீழ்க்காணும் 16 அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு, மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தொடரப்பட்டுள்ள வழக்கின் W.P.(MD).No.25387/2025 இறுதித்தீர்ப்பாணைக்குட்பட்டு (Subject to Outcome of the Writ Petition), தமிழ்நாடு பள்ளிக் கல்விப் பணி விதிகளில் (Section 8A – Tamil Nadu School Educational Service Service Manual Volume II) விதி 2(C)(i)-இன்படி பதவி உயர்வு / பணிமாறுதல் வழங்கியும் அவரவர் பெயருக்கெதிரே குறிப்பிட்டுள்ள பணியிடத்தில் பணியமர்த்தியும் இதன்வழி ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | விகிதாச்சார சுழற்ச்சி எண். | தலைமையாசிரியர் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் பள்ளி | பதவி உயர்வு / பணிமாறுதல் வழங்கப்படும் அலுவலகம் |
|---|---|---|---|
| 1. | 1035 | இரா.வெ.ஜெ.ரெகுபதி,<br>தலைமையாசிரியர்,<br>அரசு உயர்நிலைப்பள்ளி,<br>ஆனையூர், மதுரை மாவட்டம். | மாவட்டக்கல்வி அலுவலர்<br>(தொடக்கக்கல்வி),<br>திருமங்கலம்,<br>மதுரை மாவட்டம்.<br>(திரு.எம்.கணேசன் மாறுதல்) |
| 2. | 1036 | கே.திருமுருகன்,<br>தலைமையாசிரியர்,<br>அரசு உயர்நிலைப்பள்ளி,<br>குளியனூர், தருமபுரி மாவட்டம். | மாவட்டக்கல்வி அலுவலர்<br>(தொடக்கக்கல்வி), சேலம்.<br>சேலம் மாவட்டம்.<br>(திருமதி.இ.மான்விழி பதவி உயர்வு) |
| 3. | 1037 | எம்.சௌந்தரராஜ்,<br>தலைமையாசிரியர்,<br>அரசு மேல்நிலைப்பள்ளி,<br>நள்ளி, விருதுநகர் மாவட்டம். | மாவட்டக்கல்வி அலுவலர்<br>(இடைநிலை), மார்த்தாண்டம்,<br>கன்னியாகுமரி மாவட்டம்.<br>(திருமதி.ஆர்.ஷெர்லின் விமல் பதவி உயர்வு) |
| 4. | 1039 | டி.வசந்தகுமாரி,<br>தலைமையாசிரியர்,<br>அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி,<br>நங்கவள்ளி, சேலம் மாவட்டம். | மாவட்டக்கல்வி அலுவலர்<br>(இடைநிலை), சேலம்.<br>சேலம் மாவட்டம்.<br>(திரு.செ.நரசிம்மன் மாறுதல்) |
| 5. | 1041 | எம்.சத்தியமூர்த்தி,<br>தலைமையாசிரியர்,<br>அரசு மேல்நிலைப்பள்ளி,<br>பள்ளத்தூர், தஞ்சாவூர் மாவட்டம். | மாவட்டக்கல்வி அலுவலர்<br>(இடைநிலை), கரூர்,<br>கரூர் மாவட்டம்.<br>(திரு.டி.திருநாவுக்கரசு பதவி உயர்வு) |
| 6. | 1042 | க.மதியழகன்,<br>தலைமையாசிரியர்,<br>அரசு உயர்நிலைப்பள்ளி,<br>தாயனூர்,<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம். | மாவட்டக்கல்வி அலுவலகம்<br>(தொடக்கக்கல்வி),<br>திண்டுக்கல்.<br>திண்டுக்கல் மாவட்டம்.<br>(திரு.சி.இராஜராம் மாறுதல்) |

த.பி.பா..

| | | | |
|---|---|---|---|
| 7. | 1043 | டி.அமுதா,<br>தலைமையாசிரியர்,<br>அரசு மேல்நிலைப்பள்ளி,<br>வேம்படிதளம், சேலம் மாவட்டம். | மாவட்டக்கல்வி அலுவலர்<br>(இடைநிலை),<br>திண்டுக்கல்,<br>திண்டுக்கல் மாவட்டம்.<br>(திரு.நாகேந்திரன் பதவி உயர்வு) |
| 8. | 1044 | த.இராஜு,<br>தலைமையாசிரியர்,<br>மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி,<br>திருவப்பூர்,<br>புதுக்கோட்டை மாவட்டம். | மாவட்டக்கல்வி அலுவலர்<br>(தொடக்கக்கல்வி),<br>திருவள்ளூர், திருவள்ளூர் மாவட்டம்.<br>(திருமதி.எம்.மோகனா பதவி உயர்வு) |
| 9. | 1045 | எம்.முனியசாமி,<br>உதவி திட்ட அலுவலர்,<br>ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி,<br>முதன்மைக்கல்வி அலுவலகம்,<br>தூத்துக்குடி மாவட்டம். | மாவட்டக்கல்வி அலுவலர்<br>(இடைநிலை),<br>தூத்துக்குடி,<br>தூத்துக்குடி மாவட்டம்.<br>(திரு.சீ.இரவீந்திரன் மாறுதல்) |
| 10. | 1046 | மு.கேசவன்,<br>தலைமையாசிரியர்,<br>அரசு உயர்நிலைப்பள்ளி,<br>அரிகரன் நகர்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | மாவட்டக்கல்வி அலுவலர்<br>(தொடக்கக்கல்வி),<br>வேலூர்,<br>வேலூர் மாவட்டம்.<br>(திரு.எஸ்.தயாளன் பதவி உயர்வு) |
| 11. | 1047 | ஆர்.பாலமுருகன்,<br>தலைமையாசிரியர்,<br>அரசு மேல்நிலைப்பள்ளி,<br>தாண்டவராயபுரம்,<br>சேலம் மாவட்டம். | மாவட்டக்கல்வி அலுவலர்<br>(தொடக்கக்கல்வி),<br>கள்ளக்குறிச்சி.<br>கள்ளக்குறிச்சி மாவட்டம்.<br>(திருமதி.பி.ஜோதிமணி மாறுதல்) |
| 12. | 1048 | சு.இந்திராகாந்தி,<br>தலைமையாசிரியர்,<br>அரசு உயர்நிலைப்பள்ளி,<br>தெற்கூர், விருதுநகர் மாவட்டம். | மாவட்டக்கல்வி அலுவலர்<br>(தொடக்கக்கல்வி),<br>வள்ளியூர்,<br>திருநெல்வேலி மாவட்டம்.<br>(திரு.கே.ஏ.லியோ தாமஸ் இறப்பு) |
| 13. | 1049 | சி.சிவராமன்,<br>தலைமையாசிரியர்,<br>அரசு ஆண்கள்<br>மேல்நிலைப்பள்ளி,<br>சிங்காரம்பேட்டை,<br>கிருஷ்ணகிரி மாவட்டம். | மாவட்டக்கல்வி அலுவலர்<br>(தொடக்கக்கல்வி),<br>இராணிப்பேட்டை ,<br>இராணிப்பேட்டை மாவட்டம்.<br>(திருமதி.ஆர்.பிரேமலதா பதவி உயர்வு) |

| | | | |
|---|---|---|---|
| 14. | 1050 | மு.சித்ரா,<br>தலைமையாசிரியர்,<br>அரசு உயர்நிலைப்பள்ளி,<br>கொங்கல் நகரம்,<br>திருப்பூர் மாவட்டம். | மாவட்டக்கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி),<br>திருப்பூர்,<br>திருப்பூர் மாவட்டம்.<br>(திரு.ஏ.இராஜு பதவி உயர்வு) |
| 15. | 1051 | மு.செந்தில் குமார்,<br>தலைமையாசிரியர்,<br>அரசு உயர்நிலைப்பள்ளி,<br>இரங்கநாதபுரம்,<br>கள்ளக்குறிச்சி மாவட்டம். | மாவட்டக்கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி),<br>திண்டிவனம்,<br>விழுப்புரம் மாவட்டம்.<br>(திருமதி.அ.இளமதி மாறுதல்) |
| 16. | 1052 | எஸ்.மகேஸ்வரி,<br>தலைமையாசிரியர்,<br>மு.ரெ.அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி,<br>கன்னிவாடி,<br>திண்டுக்கல் மாவட்டம். | மாவட்டக்கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி),<br>பொள்ளாச்சி,<br>கோயமுத்தூர் மாவட்டம்.<br>(திரு.கோ.பாரதி மாறுதல்) |

மேற்காணும் மாவட்டக்கல்வி அலுவலர் மற்றும் ஒத்த நிலையில் உள்ள பணியிடங்களுக்கான ஊதிய விகிதம் நிலை–23 (ரூ.56.900/–ரூ.2,09,200/–) ஆகும். தமிழ்நாடு பள்ளிக்கல்விப்பணி விதிகளில் (Section 8A – Tamil Nadu School Educational Service – Service Manual Volume II) விதிகளில் விதி 2 (C) (iii)–இன்படி பதவி உயர்வு பெற்ற அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் அடிப்படை விதி 22(B)–இன்படி ஊதியம் நிர்ணயம் செய்து கொள்ளத் தகுதியுடையவராவார்கள்.

2. பதவி உயர்வு / பணிமாறுதல் பெற்ற தலைமை ஆசிரியர் தனது பணியிடப் பொறுப்புகளை அப்பள்ளியின் மூத்த முதுகலை / பட்டதாரி ஆசிரியரிடம் ஒப்படைத்துவிட்டு உடனடியாக புதிய பணியிடத்தில் பணியேற்றிட அறிவிக்கப்படுகிறது. பள்ளிப் பொறுப்பினை ஏற்கும் மூத்த முதுகலை / பட்டதாரி ஆசிரியர் உண்டியல் ஏற்பளிப்பது உட்பட முழுக் கூடுதல் பொறுப்புடன் மறு ஆணைகள் பிறப்பிக்கப்படும் வரை மேற்கொள்வதற்கு செயல்பட அனுமதித்து ஆணை வழங்கப்படுகிறது.

3. பதவி உயர்வு / பணிமாறுதல் பெற்ற தலைமையாசிரியர்கள் ஏற்கனவே மாவட்டக்கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்த பணியிடங்களில் பொறுப்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டிருப்பின், அவர்கள், சார்ந்த முதன்மைக்கல்வி அலுவலரால் நியமனம் செய்யப்படும் பொறுப்பு அலுவலரிடம் பொறுப்பினை ஒப்படைத்து விட்டு பணிவிடுப்பு பெற்று புதிய பணியிடத்தில் பணியில் சேர அறிவுறுத்தப்படுகிறார்கள்.

த.பி.பா..

4. மேற்கண்ட பதவி உயர்வு / பணிமாறுதலினை உரிமைவிடல் செய்வதாக இருப்பின் தற்காலிக உரிமைவிடலா அல்லது நிரந்தர உரிமைவிடலா எனத் தெளிவாக குறிப்பிட்டு உரிய விண்ணப்பத்தினை சார்ந்த முதன்மைக்கல்வி அலுவலர் வழியாக உடன் இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும்.

5. பதவி உயர்வு / பணிமாறுதல் பெற்ற தலைமையாசிரியர் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டது மற்றும் புதிய பணியிடத்தில் பணியில் சேர்ந்தமைக்கு உரிய அறிக்கைகளை உடன் இயக்குநருக்கும் தொடர்புடைய இதர அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பள்ளிக்கல்வி இயக்குநர்**

**பெறுதல்:**

சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்கள்
(தொடர்புடைய முதன்மைக்கல்வி அலுவலர் வழியாக)

**நகல்:**

1. சம்பந்தப்பட்ட மாவட்டக்கல்வி அலுவலர்கள்.
2. சம்பந்தப்பட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்.
3. இயக்குநர், அரசுத்தேர்வுகள் இயக்ககம், சென்னை-06.
4. இயக்குநர், தொடக்கக்கல்வி இயக்ககம், சென்னை-06.
5. இயக்குநர், மாநிலக்கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை-06.
6. இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம், சென்னை-06.
7. செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை-06.
8. இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம், சென்னை-06.
9. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை-06.
10. செயலாளர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை-06.
11. சம்பளம் மற்றும் கருவூல அலுவலர், சென்னை(தெற்கு).
12. சார்ந்த கருவூல அலுவலர்கள்.
13. மாநில கணக்காயர், சென்னை-18.
14. இவ்வியக்கக சி1 / டபிள்யூ-1 பிரிவுகள்.
15. அரசுச் செயலாளர், பள்ளிக்கல்வித்துறை, தலைமைச்செயலகம், சென்னை-09. (தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது).